<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 263/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.5<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமசாமி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பழனிசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 03.10.2024

<u>**முதல் விசாரணை**</u>

நான் ஆலாம்பாளையத்தில் வசித்து வருகிறேன். கான்கீரிட் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். கடந்த 15.07.2022 ம் தேதி நான் வேலைக்கு சென்று விட்டு மதியம் சாப்பாட்டு வந்தேன் என் வீட்டிற்கு முன்னால் விபத்து நடந்திருந்தது. பெண்மணி ஒருவர் இறந்து விட்டதாக கூறினார்கள். போலிசார் அங்கு வந்து வரைபடம் வரைந்தார்கள். என் வீட்டை பற்றி கேட்டார்கள். அதில் நானும் மருதமுத்து என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த **பார்வை மகசர் அசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. சம்பவ இடத்தில் கூட்டமாக இருந்தார்கள் என்றால் ஆமாம். இறந்த நபர் தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் கையெழுத்து செய்த

ஆவணத்தில் உள்ள விவரம் தெரியுமா என்றால் வரைபடம் வரைந்தார்கள். காவல்நிலையத்தில் கையெழுத்து செய்து விட்டு பொய்யாக சம்பவ இடத்தி்ல் கையெழுத்து செய்திர்கள் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. வரைபடம் ஸ்கேல் வைத்து பென்சில் வைத்து வரைந்தார்களா என்றால் பென்சில். வரைபடத்தில் இரண்டு வீடு தவிர வேறு எதுவும் காட்டவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் என்று குறிப்பிட்ட இடம் தெரியாது என்றால் சரிதான்.பக்கத்து வீடு என்பதால் என்னை கையெழுத்து கேட்டதால் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.